# தீ பரவியது; இந்தியாவைப் பிளக்கும் தொகுதி மறுவரையறை தோற்றது!

பிரதமர் நரேந்திரர், ஈரான், இசுரேல், அமெரிக்க நாடுகளுக்குப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, கொரானா தொற்றுக் காலத்தில் மாநிலங்கள் ஒன்றிய அரசுக்கு ஒத்துழைத்தது போல இப்போரினால் ஏற்படும் இறக்கங்களைச் சந்திக்க மாநில முதல்வர்கள் ஒன்றிய அரசோடு கைகோர்க்க வேண்டும் என்றார். ஒரே மாதத்தில் இந்நிலையிலிருந்து தலைகீழாக மாறி மாநில உரிமைகளைப் பறிக்கின்ற தொகுதி மறுவரையறை சட்டத்திருத்தத்தை நாடாளுமன்றத்தில் முன்மொழியச் செய்தார்.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் கொதித்தெழுந்தார். தொகுதி சட்ட வரையறையின் நகலை எரித்தார். தீ பரவட்டும் என்றார். ஆம், தீ பரவியது. காஷ்மீர், உத்திரப்பிரதேசம் தொடங்கி மேற்கு வங்கம், பஞ்சாப், தெலங்கனா, கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் உள்ள பாஜகவை எதிர்க்கும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தொகுதி மறுவரையறைச் சட்டத்திருத்தத்தைத் தோல்வியுறச் செய்தன.

உலகின் பல நாடுகளில் மக்கள்தொகை பெருகுவதும் குறைவதும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. மக்கள்தொகை பெருக்கம் நாட்டினுடைய பொருளாதாரத்தை, சுற்றுச்சூழலை, உணவுத் தேவையைப் பாதிக்கும் என்பதைப் பல அறிஞர்கள் சுட்டி வருகின்றனர்.

சான்றாக, 18ஆம் நூற்றாண்டில் இரபர்ட் தாமஸ் மால்தஸ் என்பவர் மக்கள்தொகைப் பெருக்கத்தால் உணவுப் பற்றாக்குறை ஏற்படும், நோய்கள் பெருகும், மக்கள் பெரும் எண்ணிக்கையில் இறந்துவிடுவர் என்று குறிப்பிட்டார். ஆனால், ஐரோப்பிய நாடுகளில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்ட பிறகு மால்தஸ் கணித்தவாறு மக்கள்தொகை பெருகவில்லை. மாறாக, மக்கள்தொகை குறைந்தது. இங்கிலாந்து நாட்டில் தொழில்புரட்சி ஏற்பட்ட காலத்தில் மக்கள்தொகை வீழ்ச்சியுறத் தொடங்கியதை அறிஞர் காரல் மார்க்சு தனது மூலதனம் நூலில் புள்ளிவிவரங்களோடு வெளியிட்டார்.

சமூக, பொருளாதாரத் தளங்களில் வளர்ச்சி ஏற்பட்டு, மக்கள் வாழ்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டது. எனவே, வட அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் மக்கள்தொகை வளர்ச்சி பெருமளவில் குறைந்தது. ஆனால் இந்தியாவில் மக்கள்தொகை பெருகி இன்று உலகின் மக்கள்தொகை எண்ணிக்கைகளில் முதல் நாடாக இடம் பெற்றுள்ளது. சீனா முதல் இடத்தில் இருந்து இரண்டாம் இடத்திற்குச் சென்றுள்ளது. இதற்கு முதன்மையான காரணம் சீனாவின் பொருளாதார வளர்ச்சி மக்கள் வாழ்வியலில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. பெண்கள் கருவுறுதல் குறைந்தது. தொடர்ந்து குழந்தைகள் இறப்பு வீதம், மகப்பேறு காலத்தில் தாய் இறப்பு வீதம் குறைந்தது. ஐக்கிய நாடுகள் மன்றம் ஆண்டுதோறும் வெளியிடும் மானுட மேம்பாட்டுக் குறியீடுகளில், 2025ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி உலகின் 193 நாடுகளின் தரவரிசைப் பட்டியலில் சீனா 78ஆம் இடத்தில் உள்ளது. இந்தியா 130ஆம் இடத்தில் உள்ளது. இதற்கு காரணம், வட மாநிலங்களில் மக்கள் தொகை கட்டுப்படுத்தப் படவில்லை. மேலும், கல்வி, சுகாதாரம், பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆகிய குறியீடுகளில் பின்தங்கியும், வறுமை, வேலையின்மை ஆகியவற்றால் வட மாநிலங்கள் பின் தங்கியுள்ளதே ஆகும்.

ஒன்றிய அரசு 1960களிலிருந்து குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மாநிலங்கள் பின்பற்ற வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தியது. இந்த வேண்டுகோளைத் தென் மாநிலங்கள் ஏற்று, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தின. இதனால் தென் மாநிலங்களில் மக்கள்தொகை வளர்ச்சி குறைந்துவிட்டது. இதன் தொடர்பாகத் தமிழ்நாடு அரசால் நீதிபதி ஜோசப் குரியன் தலைமையிலான ஒன்றியமாநில உறவுகள் குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட குழு, சில ஆய்வு புள்ளிவிவரங்களையும் வெளியிட்டுள்ளது.

1971ஆம் ஆண்டில் தமிழ்நாடும், பீகார் மாநிலமும் மக்கள் தொகையில் ஏறக்குறைய ஒரே எண்ணிக்கையில் இருந்தன (தமிழ்நாடு - 4.1 கோடி, பீகார் 4.2 கோடி). நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பீகார் 40 ஆகவும், தமிழ்நாடு 39 ஆகவும் இருந்தன. 50 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டின் மக்கள்தொகை 2025இல் 7.6 கோடியாக உயர்ந்துள்ளது. ஆனால் பீகார் மாநிலத்தின் மக்கள் தொகை 12.3 கோடியாக உயர்ந்துள்ளது. பெண்கள் கருவுறுதல் எண்ணிக்கையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளே இதற்கு காரணமாக அமைகிறது. சான்றாக, 2023 மாதிரி புள்ளிவிவர அறிக்கையின்படி (Sample Registration System - Statistical Report 2023), பீகாரின் மொத்தக் கருவுறுதல் வீதம் 2.8 ஆகவும், தமிழ்நாட்டின் வீதம் 1.3 விழுக்காடாகவும் உள்ளது என்று இவ்வறிக்கை குறிப்பிடுகிறது.

இந்தப் புள்ளிவிவரங்களைப் பயன்படுத்தினால் மக்களவையில் பீகார் மாநிலத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 40 லிருந்து 50 ஆக உயரும். அதே நேரத்தில் தமிழ்நாட்டின் எண்ணிக்கை 39லிருந்து 29ஆகக் குறையும். இவ்வாறு வட மாநிலங்களின் கருவுறுதல் வீதம் உத்திரபிரதேசம் 2.6, மத்திய பிரதேசம் 2.4, இராஜஸ்தான் 2.3, சத்திஸ்கர் 2.2 என உள்ளது. இதற்கு மாறாக, மிகக் குறைந்த கருவுறுதல் வீதங்கள் தில்லி 1.2, தமிழ்நாடு 1.3, மேற்கு வங்கம் 1.3, மகாராஷ்டிரா 1.4, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, பஞ்சாப் ஜம்மு காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் மொத்தக் கருவுறுதல் வீதம் முறையே 1.5ஆக உள்ளது. இந்தப் புள்ளிவிவரங்களின்படி, மக்கள்தொகை அடிப்படையாகக் கொண்டு தொகுதி மறுவரையறையைச் செய்வது குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஏற்று, நாட்டின் மக்கள் தொகையைக் குறைத்த, தேசிய அளவிலான இலக்குகளை எட்டிய மாநிலங்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்குவதில் தண்டனை அளிப்பதாகவும். அவற்றை எட்டாத மாநிலங்களுக்குப் பரிசளிப்பதாகவும் உள்ளது. இதுபோன்று மக்கள்தொகை அடிப்படையிலான பல தரவுகள் நீதிபதி ஜோசப் குரியன் அறிக்கையில் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 12 ஆண்டுகளாக ஒன்றிய அரசிலும், வட மாநிலங்களிலும் ஆட்சி செய்யும் பாஜக (இரட்டை என்ஜின்) அரசுகள் என்ன செய்யத் தவறின? அதிக மக்கள்தொகையைக் கொண்ட வட மாநிலங்களில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை தீவிரமாக நடைமுறைப்படுத்தத் தவறியதும், கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் தேவையான வளர்ச்சியை அடையாமல் இருப்பதற்கும் பாஜகவின் இரட்டை என்ஜின் அரசுகள்தான் காரணம்.


மேலும், பாஜகவின் மூளையாகச் செயல்படும் ஆர்.எஸ்.எஸ். சங் பரிவார அமைப்புகள் மக்கள்தொகையில் இசுலாமியர்கள் பெருகிவிடுவார்கள் என்ற பொய்யான பரப்புரையைக் கட்டவிழ்த்து, இந்துக்கள் அதிக குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு எதிராகவே செயல்பட்டு வருகிறார்கள்.

இதன் விளைவு என்னவென்றால் உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார், சத்திஸ்கர், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் குழந்தைகள் இறப்பு வீதத்தில் 2025ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி குழந்தைகள் இறப்பு விகிதம் எதிர்பார்த்த அளவில் குறையவில்லை.

தென் மாநிலங்களில் குடும்பக் கட்டுப்பாட்டு திட்டம் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதால் பிறக்கின்ற 1000 குழந்தைகளில் தமிழ்நாட்டில் 7, கேரளாவில் 5, கர்நாடகாவில் 14, ஆந்திராவில் 19, தெலங்கானாவில் 18 குழந்தைகள் இறக்கின்றன. உத்திரபிரதேசத்தில் 1000 பிறந்த குழந்தைகளுக்கு 37 குழந்தைகள் இறக்கின்றன. குழந்தைகளின் இறப்பு விகிதத்தில் ஆப்பிரிக்க நாடுகளுக்கு இணையாக உத்தரப் பிரதேச மாநிலம் உள்ளது.

அதே போன்று 2025 புள்ளிவிவரப்படி மகப்பேறு காலங்களில் தாய் இறந்துவிடும் எண்ணிக்கை ஒரு இலட்சத்திற்கு உத்திரபிரதேச மாநிலத்தில் 141ஆகவும், மத்தியப் பிரதேச மாநிலத்தில் 159 ஆகவும், தமிழ்நாட்டில் 35, ஆந்திர மற்றும் கேரளாவில் 30 என்றும் கர்நாடகாவில் 63, தெலங்கானாவில் 45 என்றும் உள்ளது.

2025ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் புள்ளிவிவரப்படி பிறந்த குழந்தை முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள். உத்திரபிரதேசத்தில் ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ள குழந்தைகள் (49 விழுக்காடு) வளர்ச்சியே இல்லாத குழந்தைகள் (5 விழுக்காடு). எடை குறைவான குழந்தைகளின் எண்ணிக்கை 20 விழுக்காடு அளவில் உள்ளனர். பீகார் மாநிலத்தில் 43 விழுக்காடு, 9 விழுக்காடு, 21 விழுக்காடு அளவில் உள்ளது. மத்தியப் பிரதேசத்தில் 42 விழுக்காடு, 8 விழுக்காடு, 25 விழுக்காடு அளவில் உள்ளது. இராஜஸ்தான் மாநிலத்தில் 36 விழுக்காடு, 6 விழுக்காடு, 17 விழுக்காடு அளவில் உள்ளது. அதே சமயத்தில் தமிழ்




நாட்டில் 14 விழுக்காடு, 3 விழுக்காடு, 6 விழுக்காட்டு அளவில் உள்ளது. கேரளாவில் 36 விழுக்காடு, 3 விழுக்காடு, 10 விழுக்காட்டு அளவில் உள்ளது.

இத்தகைய குறைபாடுகளால் ஆரம்பப் பள்ளி முதல் உயர்நிலை பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை மேற்குறிப்பிட்ட இந்தி பேசும் வட மாநிலங்களில் குறைவாகவே உள்ளது. ஆனால் தமிழ்நாடு 1 முதல் 12ஆம் வகுப்பு வரை செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை 90 விழுக்காட்டைக் கடந்து உள்ளது. கேரளா 100 விழுக்காட்டு அளவை எட்டி முதலிடத்தில் உள்ளது. மேலும் தமிழ்நாடு உயர் கல்வியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையில் 52 விழுக்காடாக உயர்ந்து இந்திய மாநிலங்களில் முதல் மாநிலமாக உள்ளது.

மானுட வளர்ச்சிக்குத் தேவையான தாய்சேய் இறப்புகளைக் கட்டுப்படுத்தத் தவறியது, கல்வி, சுகாதாரம் போன்ற வசதிகளை வழங்கத் தவறியது யார் என்பதை இப்புள்ளிவிவரங்கள் சுட்டுகின்றன. மானுட வளர்ச்சியில் இந்தியாவில் தென்னக மாநிலங்கள் முதன்மையாக இருப்பதற்கு காரணம் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை உரிய முறையில் நிறைவேற்றி கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் மாநில அரசுகள் கவனம் செலுத்தி மானுட மேம்பாட்டுக் குறியீடுகளில் வட மாநிலங்களை விட மேம்பட்ட நிலையில் உள்ளதே ஆகும்.

ஆக்கப்பூர்வமான அரசியலுக்குப் பதிலாக எதிர்மறை அரசியலை ஒன்றிய பாஜக அரசு பின்பற்றி நாட்டின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி வரும் தென்னக மாநிலங்களைத் திட்டமிட்டுச் சிதைப்பதுதான் சமூக நீதியா? என்ற கேள்வி எழுகிறது. மேலும், தென்னக மாநிலங்கள் இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 30 விழுக்காட்டுப் பங்கினை அளித்து வருகின்றன. தென்னக மாநிலங்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மறைமுக வரி அதிகாரங்களை மட்டுமே பயன்படுத்தி மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 விழுக்காட்டு வரி வருவாயைத் திரட்டுகின்றன. ஆனால், வட மாநிலங்கள் சொந்த வரி வருவாயை 5 விழுக்காட்டு அளவில்தான் திரட்டுகின்றன. தென்னக மாநிலங்கள் பொருளாதார வளர்ச்சியைச் சிறந்த முறையில் மேலாண்மை செய்வதன் வழியாக நேர்முக மற்றும் மறைமுக வரி வருவாயை ஒன்றிய அரசிற்கு வட மாநிலங்களைவிட அதிக அளவில் திரட்டித் தருகின்றன.

ஆனால், ஐந்து தென்னக மாநிலங்கள் இணைந்து 17 விழுக்காடு அளவிற்குத்தான் ஒன்றிய அரசின் வரிப்பகிர்வு பங்கினைப் பெறுகின்றன. ஆனால், உத்திரபிரதேசம் மட்டும் 17 விழுக்காட்டு வரிப்பகிர்வினை ஒன்றிய அரசிடமிருந்து பெறுகிறது. எனவே, தென்னக மாநிலங்களின் வரி வருவாவையப் பெற்றுத்தான் ஒன்றிய அரசினால் வட மாநிலங்களின் நிதி நிலையைச் சரி செய்ய முடிகிறது. இத்தகைய போக்கு வட மாநிலங்கள் வளர்ச்சி அடைவதற்குத் தென் மாநிலங்கள் உறுதுணையாக இருக்கின்றன என்பதுதான் உண்மை.



பேராசிரியர்
மு.நாகநாதன்

இத்தகைய ஆதாரப்பூர்வமான தரவுகளையும், தகவல்களையும் மறைத்துவிட்டுப் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு என்ற ஏற்கனவே 2023இல் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை இந்தத் தொகுதி மறுவரையறைச் சட்டத்திருத்தத்துடன் இணைத்துத் தொடர்ந்து மக்களை ஏமாற்ற முற்பட்ட ஒன்றிய பாஜக அரசிற்கு எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து தக்க பாடத்தினை வழங்கியுள்ளன.

1976ஆம் ஆண்டில் காங்கிரசு ஆட்சியில் 25 ஆண்டுகளும், பாஜக ஆட்சியில் 2002இல் மேலும் 25 ஆண்டுகள் தள்ளி வைத்தன. இந்த அணுகுமுறையின் அடிப்படையில் தொலைநோக்குப் பார்வையோடு அணுகி தமிழ்நாட்டின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தில் தொகுதி மறுவரையறைச் சட்டத்தை 25 ஆண்டுகள் தள்ளிவைக்கும் தீர்மானத்தை நிறைவேற்றி ஒன்றிய அரசிற்கு அனுப்பி வைத்தார்.

நீதிபதி ஜோசப் குரியன் அறிக்கையில் தொகுதி மறுவரையறையின் வழியாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பல நாடுகள் மேற்குறிப்பிட்ட அணுகுமுறையையே பின்பற்றி வருகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சான்றாக, அமெரிக்க நாடாளுமன்றம் 1929 முதல் 435 உறுப்பினர்களையே கொண்டுள்ளது. ஆனால், மக்கள் தொகை 1929க்கு பிறகு மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. இத்தாலி நாட்டில் 2020ஆம் ஆண்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 630லிருந்து 400ஆகக் குறைத்துள்ளது. ஜப்பான் நாட்டிலும் 465 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்ற எண்ணிக்கையைக் குறைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெண்கள் கருவுறுதல் தொடங்கி, தொடரும் பல குறைபாடுகள் காலப்போக்கில் குறைந்து வருகின்றன என்பதே உலகின் பல நாடுகளில் நாம் காண்கிற உண்மை. இத்தகைய நோக்கில் நீதிபதி ஜோசப் குரியன் குழு அறிக்கை தொகுதி மறுவரையறையை 100 ஆண்டுகளுக்குத் தள்ளிவைக்கப் பரிந்துரைத்துள்ளது.

பாஜக நரேந்திரர் விரும்புவது போல 800க்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் கருத்தாழமிக்க விவாதங்கள் நடைபெறுவது குறைந்துவிடும். பல மாநிலங்களின் பிரச்சினைகளை உரிய முறையில் எடுத்துக்கூறுவதற்கு வழங்கப்படும் கால அளவும் பெருமளவும் குறைந்து விடும்.

ஒன்றிய அரசு பல நிதிச் சிக்கல்களைச் சந்தித்து வருகிறது. ஈரான் இசுரேல் போரின் காரணமாக இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி 6 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காட்டிற்குச் சரிந்துவிடும் என்று பல ஆய்வு நிறுவனங்கள் சுட்டிக்காட்டுகின்றன. 2025-2026ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை புள்ளிவிவரத்தில் 543 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் செலவிடும் தொகை மிக மிக அதிகம் என்று பல ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஆண்டு ஒன்றிற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மற்ற இதர செலவினங்களுக்கும் 1300 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. ஆண்டுதோறும் நாடாளுமன்ற மேம்பாட்டு நிதிக்காக வழங்கப்படும் ரூபாய் 5 கோடி இந்தக் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இந்தத் தொகை 800க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் என்று கணக்கிட்டால் ஆண்டிற்கு 2000 கோடிக்கு மேல் செலவாகும்.

உதகையில் சட்டமன்றத்தை நடத்துவதைக் கண்டனம் செய்து அறிஞர் அண்ணா “கும்பி எரிகிறது, குடல் கருகுகிறது. கோலேந்திகளே குளுகுளு ஊட்டி உங்களுக்கு ஒரு கேடா?” என்று கேட்டார்.

பொருளாதாரம் சரிகிறது. விலைவாசி விண்ணைத் தொடுகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் இளைஞர்களை வாட்டுகிறது. ஏற்றத்தாழ்வுகள் பெருகுகின்றன. நரேந்திரர் ஆட்சியோ நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்தி, மக்கள் கவனத்தை ஏமாற்றப் பார்க்கிறது என்று அறிஞர் அண்ணா வழியில் சொல்லத் தோன்றுகிறது அல்லவா?



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.4.2026) சென்னை, இராயபுரம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் இராயபுரம் தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் சுபேர்கானை ஆதரித்து திறந்த வாகனத்தில் வாக்கு சேகரித்தார்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.4.2026) சென்னை, ஆர்.கே.நகர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் ஆர்.கே.நகர் தொகுதி கழக வேட்பாளர் எபிநேசரை ஆதரித்து திறந்த வாகனத்தில் வாக்கு சேகரித்தார்.

## தி.மு.க. அரசின் எண்ணற்ற சாதனைகளை நாங்கள் சொல்கிறோம்!

# மோடி அரசு தமிழ்நாட்டுக்குச் செய்யும் துரோகத்தை பழனிசாமி பட்டியலிடுவாரா?

### தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் மதுரை பிரச்சாரக் கூட்டத்தில் கேள்வி!

மதுரை, ஏப்.22 -

தி.மு.க அணியிடம் சாதனைகளும் திட்டங்களும் கை நிறைய உள்ளன. எடப்பாடி எதைச் சொல்லி வாக்கு கேட்பார்?. மோடி அரசின் தமிழகத் துரோகத்தை பட்டியலிட்டு வாக்கு கேட்பாரா? என மதுரையில் தி.மு.க. அணிக்கு பொன்குமார் பிரச்சாரம் மேற்கொண்டபோது கேள்வி எழுப்பினார்.

திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர்களை ஆதரித்து விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் தலைவர் பொன்குமார் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார். அந்த அடிப்படையில் மதுரையில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டு அவர் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:-



**செல்லுபடியாகாத பி.ஜே.பி.!**

திராவிட முன்னேற்றக் கழக அணி வாக்காளர்களிடம் திராவிட மாடல் ஆட்சி செய்த சாதனைகளை எடுத்துக் கூறி வாக்குகளைக் கேட்கிறோம். ஒரு கை நிறைய சாதனைகள் நம்மிடத்தில் இருக்கிறது. இன்னொரு கை நிறைய அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு செய்யப் போகும் திட்டங்கள் இருக்கிறது. ஆகவே எங்களுக்கு ஓட்டளியுங்கள் என்று கேட்பதற்கு உரிமையும், வாய்ப்பும் நமக்கு இருக்கிறது. ஆனால் எதிரணியில் எடப்பாடியார் எதைக் கூறி வாக்களிக்க கோர முடியும்?.

பத்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியின் உருப்படியான ஏதாவது ஒரு சாதனையை அவரால் சொல்ல முடியுமா? தமிழ் மண்ணில் செல்லுபடி ஆகாத பி.ஜே.பி.யை தோளில் சுமக்கிறேன், ஆகவே வாக்களியுங்கள் என்று கோருவாரா?. மதுரைக்கும், கோவைக்கும் மெட்ரோ ரயில் வழங்காத பி.ஜே.பி. எங்களோடு இருக்கிறது.

ஆகவே வாக்குளியுங்கள் என்று கோருவாரா? எய்ம்ஸ் மருத்துவமனை செங்கல் செங்கல்லாக நகர்ந்து கொண்டிருக்கிறது. அதற்கு வாக்குளியுங்கள் என்று கோருவாரா? மும் மொழித் திட்டத்தின் பெயரால் இந்தியைத் திணிக்க முயற்சிக்கும் மோடியை ஆதரித்து வாக்களியுங்கள் என்று கோருவாரா?.

மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொள்ளாத காரணத்தினால் மாணவர்களுக்கான கல்வி பணத்தில் 3,200 கோடியை வழங்காமல் நிறுத்தி வைத்துள்ள மத்திய அரசு ஆதரித்து வாக்களியுங்கள் என்று கோருவாரா? பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட பேரிடர் நிவாரண நிதி வழங்காத மோடிக்கு வாக்குளியுங்கள் என்று கோருவாரா?

தமிழ்நாட்டிற்கு புதிய ரயில் திட்டங்கள் உட்பட எந்த திட்டத்தையும் நடைமுறைப்படுத்தாத மோடி எங்களோடு இருக்கிறார். ஆகவே வாக்களியுங்கள் என்று கோருவாரா? அனிதா போன்ற ஆயிரம் இளைஞர்கள் மாண்டாலும் நீட் தேர்வை ரத்து செய்ய மாட்டேன் என்ற அடம் பிடிக்கும் மத்திய அரசை ஆதரித்து வாக்களியுங்கள் என்று கோருவாரா? சமூக நீதிக்கு தொடர்ந்து அச்சுறுத்தலாக மோடி அரசு செயல்பட்டுக் கொண்டிருப்பதற்கு வாக்கு கோருவாரா?

**இந்தியாவின் தலை சிறந்த மாநிலம் தமிழ்நாடு!**

சுவிஸ் வங்கியில் இருந்து கருப்பு பணத்தை மோடி மீட்டாரே அதற்கு வாக்களியுங்கள் என்று கோருவாரா? அந்தப் பணத்தில் ஒவ்வொருவர் வங்கிக் கணக்கிலும் 15 லட்சம் செலுத்தினாரே மோடி அதற்கு வாக்களியுங்கள் என்று கோருவாரா? இறுதியாக மகளிருக்கான இடஒதுக்கீடு என்ற முகமூடியை அணிந்து, தொகுதி வரையறை மூலம் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களுக்கு மிகப்பெரிய துரோகத்தை இழைக்க மோடி முயற்சித்தாரே, அதற்கு வாக்களிகள் என்று கோருவாரா? அந்தத் துரோகத்தை தடுத்து நிறுத்தி தமிழ்நாட்டின் தன்மானத்தை திராவிட முன்னேற்றக் கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் காத்து விட்டாரே. அதற்கு எங்களுக்கு வாக்களியுங்கள் என்று கோருவாரா? இதற்கெல்லாம் எடப்பாடி தான் பதில் கூற வேண்டும்.

மக்கள் மிகத் தெளிவாக இருக்கிறார்கள். 200 தொகுதிகளுக்கு மேல் மகத்தான வெற்றி பெற்று மீண்டும் தளபதியார் தலைமையில் திராவிட மாடல் ஆட்சி தொடரும். இந்தியாவில் தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாடு உருவாகும். அதற்கு நம்முடைய வாக்குகள் மட்டுமல்ல நாம் ஒவ்வொருவரும் 10 வாக்குகளை நம்முடைய அணிக்கு கொண்டு வந்து சேர்க்கிற பணியை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தலைவர் பொன்குமார் அவர்கள் பேசினார்.





மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதி தி.மு.கழக வெற்றி வேட்பாளர் டி.ஜே. கோவிந்தராஜனுடன் தொகுதி பார்வையாளரும், கலை இலக்கிய பகுத்தறிவு, பேரவை மாநில துணைச் செயலாளருமான சைதை எம்.எஸ்.ஹரிபாபு நத்தம் ஊராட்சியில் கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்து ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும் என்ற முழக்கத்துடன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் கும்மிடிப்பூண்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் நா.பரிமளம் உள்ளிட்ட கழகத் தோழர்கள், மகளிர் அணியினர் பெருந்திரளாக பங்கேற்றனர்.